No. of Pages. 16

| Code No. | Y – 3033 |
|---|---|

**Register Number :** **Time : 2 Hours**

**Name :** **Max.Marks : 100**

# Entrance Examination for Admission to the P.G. Courses in the Teaching Departments, 2026

## CSS

## TAMIL LANGUAGE AND LITERATURE

### GENERAL INSTRUCTIONS

1. The Question Paper is having 100 Objective Questions, each carrying one mark.
2. The answers are to be marked **only** in the "**OMR Sheet**" provided.
3. **Negative marking** : **0.25 marks** will be deducted for each wrong answer .

### INSTRUCTIONS FOR FILLING THE OMR SHEET

- The OMR sheet should not be folded or crushed.
- Use only blue/black ball point pen to fill the circles.
- Use of pencil is strictly prohibited.
- Circles should be darkened completely and properly.
- Cutting and erasing on this sheet is not allowed.
- Do not leave any stray marks on the sheet.
- Do not use marker or white fluid to hide the mark.
- WRONG METHODS



CORRECT METHOD



DO NOT WRITE HERE

---

**கீழ்க்கண்ட வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்வு செய்க.**

**(100 × 1 = 100 marks)**

1. தமிழ் என்ற சொல் முதன்முதலில் இடம்பெற்ற நூல் எது?
   A. சிலப்பதிகாரம்
   B. குறுந்தொகை
   C. தொல்காப்பியம்
   D. இறையனார் களவியல்

2. கடைச்சங்கம் எங்கு நடைபெற்றது?
   A. தென்மதுரை
   B. மதுரை
   C. வேங்கடம்
   D. கபாடபுரம்

3. சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் எந்தப் பா வகையால் அமைந்துள்ளன?
   A. வெண்பா
   B. ஆசிரியப்பா
   C. கலிப்பா
   D. வஞ்சிப்பா

4. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று அழைக்கப்படுவது யாது ?

A. கம்பராமாயணம்
B. மகாபாரதம்
C. சிலப்பதிகாரம்
D. மணிமேகலை

5. முழுவதும் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட காப்பியம் எது ?

A. சீவக சிந்தாமணி
B. கம்பராமாயணம்
C. சூளாமணி
D. வளையாபதி

6. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று கூறியவர் யார் ?

A. கம்பர்
B. பாரதியார்
C. பாரதிதாசன்
D. கவிமணி

7. வேறு எந்த மொழியிலும் இல்லாத தமிழுக்கு மட்டும் உரிய இலக்கணம் எது ?

A. எழுத்து
B. சொல்
C. பொருள்
D. யாப்பு

8. தமிழில் இன்று கிடைக்கின்ற நூல்களுள் முதன்மையான நூல் எது ?

A. அகத்தியம்
B. தொல்காப்பியம்
C. குறுந்தொகை
D. ஐங்குறுநூறு

9. இரங்கலும் இரங்கல் நிமித்தமும் - எந்தத் திணைக்குரிய உரிப்பொருள் ?

A. குறிஞ்சி
B. முல்லை
C. மருதம்
D. நெய்தல்

10. முச்சங்கங்கள் இருந்தன என்பதை எந்த நூல் குறிப்பிடுகிறது ?

A. இறையனார் களவியல் உரை
B. வீரசோழியம்
C. தொல்காப்பியம்
D. புறப்பொருள் வெண்பாமாலை

11. எழுத்து எத்தனை வகைப்படும் ?

A. ஒன்று
B. இரண்டு
C. மூன்று
D. நான்கு

12. அண்ணம் நுனிநா வருடப் பிறக்கும் எழுத்துக்கள் எவை?

A. க, ங

B. த, ந

C. ப, ம

D. ர, ழ

13. மொழி முதல் எழுத்துக்கள் எத்தனை?

A. 22

B. 23

C. 24

D. 25

14. ஓரெழுத்து ஒரு மொழிகள் எத்தனை?

A. 40

B. 41

C. 42

D. 43

15. வெற்றிலை நட்டான் - இலக்கணக் குறிப்பு தருக.

A. பொருளாகு பெயர்

B. காலவாகு பெயர்

C. இடவாகு பெயர்

D. சினையாகு பெயர்

16. ஆயிரம் மக்கள் போரிட்டனர் - இதில் மக்கள் என்பது எதனைக் குறிக்கிறது?

A. பெண்ணை ஒழித்து ஆணை

B. ஆணை ஒழித்துப் பெண்ணை

C. உயர்திணை ஒழித்து அஃறிணையை

D. அஃறிணை ஒழித்து உயர்திணையை

17. ஐந்தாம் வேற்றுமை உருபு எத்தகைய பொருளில் வருகிறது?

A. கருவி

B. கொடை

C. நீங்கல்

D. உடைமை

18. கயல்விழி - என்பது

A. பண்புத்தொகை

B. உவமைத்தொகை

C. வேற்றுமைத் தொகை

D. அன்மொழித்தொகை

19. சால, உறு, தவ முதலான சொற்கள் எந்தப் பொருளில் வருகின்றன?

A. மிகுதி

B. வலிமை

C. அறிவு

D. அருள்

20. சங்க இலக்கியத்தில் மிகுதியான பாடல்களைப் பாடியவர் யார்?

A. அம்மூவனார்
B. ஔவையார்
C. கபிலர்
D. பரணர்

21. நற்றிணைப் பாடல்களின் அடி வரையறை எது?

A. 8 – 10
B. 9 – 12
C. 4 – 8
D. 4 – 10

22. குறுந்தொகைப் பாடலைத் தொகுத்தவர் யார்?

A. புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்
B. நல்லந்துவனார்
C. பூரிக்கோ
D. தெரியவில்லை

23. நெடுந்தொகை என்றழைக்கப்படும் நூல் எது?

A. புறநானூறு
B. அகநானூறு
C. பதிற்றுப்பத்து
D. பரிபாடல்

24. பதிற்றுப்பத்து எந்த அரசர்களைப் பாடுகிறது?

A. சேரர்
B. சோழர்
C. பாண்டியர்
D. களப்பிரர்

25. "ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"- இடம்பெற்ற நூல் எது?

A. நற்றிணை
B. குறுந்தொகை
C. புறநானூறு
D. திருக்குறள்

26. பத்துப்பாட்டுள் மிகச்சிறிய பாடல் எது?

A. முல்லைப்பாட்டு
B. மதுரைக்காஞ்சி
C. பட்டினப்பாலை
D. நெடுநல்வாடை

27. மலைபடுகடாமிற்கு வழங்கப்படும் வேறு பெயர் என்ன?

A. திருமுருகாற்றுப்படை
B. சிறுபாணாற்றுப்படை
C. பெரும்பாணாற்றுப்படை
D. கூத்தராற்றுப்படை

28. ஆரிய அரசன் பிரகத்தனிடம் தமிழ்ப் பண்பாட்டைத் தெரிவிப்பதற்குப் பாடிய பாடல் எது?

A. குறுந்தொகை
B. அகநானூறு
C. குறிஞ்சிப்பாட்டு
D. தமிழ் விடு தூது

29. பின்வருவனவற்றுள் அகப்புற நூல் எது?

A. பதிற்றுப்பத்து
B. பரிபாடல்
C. புறநானூறு
D. நற்றிணை

30. ஆதியுலாவைப் பாடியவர் யார்?

A. ஒட்டக்கூத்தர்
B. சேரமான் பெருமாள் நாயனார்
C. திருமலைநாதர்
D. கவிராச பிள்ளை

31. மதுரைக்காஞ்சியில் இடம் பெற்ற பாடல் அடிகள் எத்தனை?

A. 103
B. 301
C. 782
D. 583

32. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

A. ஜி.யு. போப்
B. கால்டுவெல்
C. வீரமாமுனிவர்
D. கிருஷ்ணபிள்ளை

33. இனியவை நாற்பது பாடலைப் பாடியவர்

A. கபிலர்
B. நல்லாதனார்
C. பூதஞ்சேந்தனார்
D. கணிமேதாவியார்

34. ஔவையார் இயற்றிய நீதி நூல்கள் எத்தனை?

A. 2
B. 3
C. 4
D. 5

35. “கொங்கச் செல்வி குடமலையாட்டி தென்தமிழ்ப் பாவை” - யார் கூற்று?

A. மாதவி
B. மாதரி
C. கவுந்தியடிகள்
D. சாலினி

36. சிறுகதையின் காலவரையறையைக் கூறியவர் யார்?

A. கோல்ட்ரிஜ்
B. எட்கர் ஆலன்போ
C. சி.சு. செல்லப்பா
D. ஷெல்லி

37. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை எனப் போற்றப்படுபவர்

A. வீரமாமுனிவர்
B. ஜி.யு. போப்
C. கால்டுவெல்
D. நோம் சாம்ஸ்கி

38. கவிதைக் கூறுகளில் முக்கியமானது எது?

A. ஒலி நயம்
B. அணி நயம்
C. சொல் நயம்
D. பொருள் நயம்

39. சிந்து சமவெளி நாகரிகத்திற்கு இணையான நாகரிகம் தமிழர் நாகரிகம் என்பதை உறுதிப்படுத்திய ஆய்வு எது?

A. அரிக்கமேடு
B. கீழடி
C. லெமூரியா
D. முசிறி

40. யானைத்தீ என்னும் நோயினால் துன்புற்றவள் யார்?

A. காயசண்டிகை
B. மாதரி
C. சுதமதி
D. ஆதிரை

41. இலம்பகம் என்னும் உட்பிரிவைக் கொண்ட இலக்கியம் எது?

A. நளவெண்பா
B. சீவக சிந்தாமணி
C. பெருங்கதை
D. வளையாபதி

42. பெரியபுராணம் யாரைக் காப்பியத் தலைவனாகக் கொண்டுள்ளது?

A. அப்பர்
B. சம்பந்தர்
C. சுந்தரர்
D. மாணிக்கவாசகர்

43. "குகனோடும் ஐவரானோம் முன்பு" - யார் கூற்று?

A. இலக்குவன்
B. இராவணன்
C. இராமன்
D. அனுமன்

44. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

A. நம்பியாண்டார் நம்பி
B. நாதமுனிகள்
C. சேக்கிழார்
D. சேந்தனார்

45. 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியவர் யார்?

A. திருநாவுக்கரசர்
B. திருஞானசம்பந்தர்
C. திருமூலர்
D. சுந்தரர்

46. பிள்ளைத்தமிழ்ப் பாடல்களுக்கு வித்திட்டவர் யார்?

A. மதுரகவியாழ்வார்
B. நம்மாழ்வார்
C. பேயாழ்வார்
D. பெரியாழ்வார்

47. " ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" - எந்த இலக்கியத்தைக் குறிக்கிறது?

A. உலா
B. அந்தாதி
C. குறவஞ்சி
D. பள்ளு

48. சிற்றிலக்கிய வகைகள் எத்தனை?

A. 86
B. 76
C. 96
D. 36

49. பள்ளு இலக்கியத்தின் வேறு பெயர் என்ன?

A. உழவுப்பாட்டு
B. உழத்திப் பாட்டு
C. உழவர் பாட்டு
D. ஏர்ப்பாட்டு

50. விமரிசனம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர்?

A. ஆ. முத்து சிவன்
B. அ.ச. ஞானசம்பந்தன்
C. தொ.மு. சி.ரகுநாதன்
D. க.நா. சுப்பிரமணியம்

51. மேலை நாடுகளில் அழகியல் திறனாய்வுக்கு முன்னோடி யார்?

A. இம்மானுவேல் காண்ட்
B. எட்கர் ஆலன்போ
C. ஏ.சி. பிராட்லி
D. ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்

52. தொல்காப்பியத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய முதல் உரையாசிரியர்

A. சேனாவரையர்
B. கல்லாடர்
C. பேராசிரியர்
D. இளம்பூரணர்

53. புறப்பொருள் வெண்பாமாலையை இயற்றியவர் யார்?

A. அமிர்தசாகரனார்
B. ஐயனாரிதனார்
C. அவிநயனார்
D. புத்தமித்தரனார்

54. எழுத்து, சொல் இரண்டிற்கு மட்டும் இலக்கணம் கூறும் நூல் எது?

A. இலக்கணக் கொத்து
B. தொன்னூல் விளக்கம்
C. நன்னூல்
D. இலக்கண விளக்கம்

55. தமிழில் தோன்றிய முதல் நிகண்டு எது?

A. சூடாமணி
B. திவாகரம்
C. ஆசிரியநிகண்டு
D. கயாதரம்

56. ‘இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்’ – என்று கூறிய நூல்

A. பிங்கலம்
B. தொல்காப்பியம்
C. நன்னூல்
D. சிலப்பதிகாரம்

57. மொழிபெயர்ப்பு நூல்களுள் ஒன்று

A. பிள்ளைத்தமிழ்
B. ஆசிய ஜோதி
C. மலரும் மாலையும்
D. சூளாமணி

58. சிற்பியின் சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல் எது?

A. சுதந்திரத் தாகம்
B. ஆலாபனை
C. ஒரு கிராமத்து நதி
D. நிலவுப்பூ

59. சிலேடைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர் யார்?

A. ஔவையார்
B. காளமேகம்
C. வில்லிப்புத்தூரார்
D. கம்பர்

60. ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்பதைப் பொதுக் கொள்கையாகக் கொண்ட இலக்கியம் எது?

A. நீலகேசி
B. சீவகசிந்தாமணி
C. சூளாமணி
D. மணிமேகலை

61. ‘சேயோன் மேய மைவரை உலகம்’ - எந்த நிலத்தைக் குறிக்கிறது?

A. குறிஞ்சி
B. முல்லை
C. மருதம்
D. நெய்தல்

62. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் முதல் நூலாகக் கருதப்படுவது.

A. பல்சந்த மாலை
B. நாகைக் கலம்பகம்
C. நவமணிமாலை
D. திருமணிமாலை

63. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

A. சேக்கிழார்
B. சீதக்காதி
C. உமறுப்புலவர்
D. திருத்தக்கத்தேவர்

64. நாட்டுப்புறவியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர்.

A. ஜேக்கப் கிரீம்
B. பென்ஜான்சன்
C. தே. லூர்து
D. வில்லியம் ரிச்சர்டு

65. சதுரகராதியை உருவாக்கியவர் யார்?

A. கால்டுவெல்
B. திவாகரர்
C. பிங்கலர்
D. வீரமாமுனிவர்

66. ஏறுதழுவுதலைக் குறிப்பிடும் சங்க இலக்கிய நூல் எது?

A. அகநானூறு
B. கலித்தொகை
C. நற்றிணை
D. புறநானூறு

67. பரணி பாடுவதில் வல்லவர் எனப் புகழ்பெற்றவர் யார்?

A. ஒட்டக்கூத்தர்
B. புகழேந்தி
C. கபிலர்
D. ஜெயங்கொண்டார்

68. நூறு பொருள்களை ஒரே நேரத்தில் நினைவில் வைத்துக் கொண்டு செயலாற்றும் திறன் மிக்கவர்.

A. ஜவ்வாதுப் புலவர்
B. வண்ணக்களஞ்சியப் புலவர்
C. செய்கு தம்பிப் பாவலர்
D. தத்துவப் போதகர்

69. தமிழ்நாட்டில் முதன் முதலில் அச்சுக்கூடத்தை நிறுவியவர் யார்?

A. சீகன்பால்கு ஐயர்
B. ஜான் குட்டன் பர்க்
C. சார்லஸ்
D. எல்லீசர்

70. தமிழில் தோன்றிய முதல் நாவல் எது?

A. கமலாம்பாள் சரித்திரம்
B. சுகுண சுந்தரி
C. பிரதாப முதலியார் சரித்திரம்
D. பத்மாவதி சரித்திரம்

71. கிறிஸ்தவக் கம்பர் என்று யாரை அழைக்கின்றனர்?

A. வேதநாயகம் பிள்ளை
B. எச்.ஏ. கிருஷ்ண பிள்ளை
C. இராமலிங்கம் பிள்ளை
D. சுந்தரம் பிள்ளை

72. ஆபிரகாம் பண்டிதர் வெளியிட்ட இசை நூல் எது?

A. கருணாமிர்த சாகரம்
B. அமிர்த சாகரம்
C. சங்கீத சாகரம்
D. ஆனந்த சாகரம்

73. பெத்லகேம் குறவஞ்சி எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது?

A. கவிதை
B. நாவல்
C. காப்பியம்
D. நாடகம்

74. தமிழ் உரைநடையின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

A. சி.வை. தாமோதரம் பிள்ளை
B. ஆறுமுக நாவலர்
C. சிவசம்புப் புலவர்
D. குமாரசாமிப் புலவர்

75. தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்ற இலக்கியம் எது?

A. பாஞ்சாலி சபதம்
B. மனோன்மணீயம்
C. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
D. மனோகரா

76. தனித்தமிழ் நடையின் தந்தை யார்?

A. திரு.வி.க.
B. தெ.பொ.மீ.
C. வையாபுரிப் பிள்ளை
D. மறைமலையடிகள்

77. நாடக இயல் என்னும் நாடக இலக்கண நூலை உருவாக்கியவர்?

A. சூரியநாராயண சாஸ்திரியார்
B. பம்மல் சம்பந்த முதலியார்
C. சங்கரதாஸ் சுவாமிகள்
D. கந்தசாமி முதலியார்

78. அண்ணாவின் படைப்பு எது?

A. மணிமகுடம்
B. மந்திரிகுமாரி
C. வேலைக்காரி
D. அந்தமான் கைதி

79. தமிழில் திறனாய்வாளர் நோக்கின்படி வெளிவந்த முதல் சிறுகதை எது?

A. குளத்தங்கரை அரசமரம்
B. பரமார்த்த குரு கதை
C. பஞ்சதந்திரக் கதைகள்
D. வினோதரசமஞ்சரி

80. புதிய வடிவங்களையும் உத்திகளையும் கையாண்டு சிறுகதை புனைந்த எழுத்தாளர்

A. கு. அழகிரிசாமி
B. ஜெயகாந்தன்
C. புதுமைப்பித்தன்
D. மௌனி

81. பசுவய்யா என்னும் புனைபெயரில் எழுதியவர்

A. கு.ப. ராஜகோபாலன்
B. சுந்தர ராமசாமி
C. ரகுநாதன்
D. கு. அழகிரிசாமி

82. சோழப்பேரரசன் இராசராசனின் வரலாற்றைக் கொண்டு வெளிவந்த புதினம் எது?

A. பார்த்திபன் கனவு
B. சிவகாமியின் சபதம்
C. பொன்னியின் செல்வன்
D. கடல் புறா

83. 2025-ஆம் ஆண்டிற்கான ஞானபீட விருது பெற்றவர் யார்?

A. அகிலன்
B. வைரமுத்து
C. நகுலன்
D. எஸ் ராமகிருஷ்ணன்

84. குமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டணம் என்னும் கடற்கரை கிராமத்தைச் சேர்ந்த எழுத்தாளர்

A. தோப்பில் முகம்மது மீரான்
B. நாஞ்சில்நாடன்
C. பூமணி
D. பொன்னீலன்

85. சங்க இலக்கியங்களுக்கு உயர்ந்த பதிப்பைக் கொண்டு வந்தவர் யார்?

A. திரு.வி.க.
B. ஆறுமுக நாவலர்
C. மறைமலையடிகள்
D. உ.வே.சா.

86. "நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்கு உழைத்தல்" - என்று கூறி வாழ்ந்தவர்

A. பாரதிதாசன்
B. சுரதா
C. பாரதியார்
D. வாணிதாசன்

87. தமிழ்ச் செம்மொழி நூல்கள் எத்தனை?

A. 40
B. 41
C. 42
D. 43

88. சிறுவர் இலக்கிய முன்னோடியாகச் சிறந்து நிற்பவர்?

A. அழ. வள்ளியப்பா
B. பெ. தூரன்
C. கவிமணி
D. வாணிதாசன்

89. ஹைக்கூ கவிதையின் வடிவம் எத்தகையது?

A. 5 – 6 – 5
B. 5 – 7 – 5
C. 7 – 5 – 7
D. 3 – 5 – 3

90. 2025-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல் எது?

A. தமிழின்பம்
B. அலையோசை
C. கிராமத்து நதி
D. தமிழ் சிறுகதைகளின் தடங்கள்

91. தன்னொற்று இரட்டல் என்னும் விதிப்படி புணர்ந்த சொல் எது?

A. வெற்றிலை
B. சேதாம்பல்
C. குன்றம்
D. பைந்தார்

92. அளை - சரியான பொருளைக் கண்டறிக.

A. கூப்பிடு
B. கடலில் தோன்றுவது
C. புற்று
D. மகிழ்ச்சி

93. மதிற்பூனை - இலக்கணக் குறிப்பு தருக.

A. பண்புத்தொகை
B. உவமைத்தொகை
C. உம்மைத்தொகை
D. வேற்றுமைத்தொகை

94. 'நாக்கு' என்பதைக் குறிக்கும் சொல்லைக் கண்டறிக.

A. தால்
B. தாள்
C. தாழ்
D. தார்

95. " உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" - என்று பாடியவர் யார்?

A. பட்டினத்தார்
B. அருணகிரியார்
C. வள்ளலார்
D. சிவகிரியார்

96. "அரியாசனம் உனக்கேயானால் உனக்குச் சரியாசனம் உண்டோ தமிழே" – இடம்பெற்ற நூல் எது?

A. கிள்ளை விடு தூது
B. தமிழ் விடு தூது
C. நெஞ்சு விடு தூது
D. தென்றல் விடு தூது

97. " கல்விக்கு அழகு கசடற மொழிதல்" என்று கூறியவர்

A. அதிவீரராம பாண்டியர்
B. வள்ளுவர்
C. ஔவையார்
D. பாரதியார்

98. பத்தாம் திருமுறையாக அமைந்த நூல் எது?

A. தேவாரம்
B. திருவாசகம்
C. திருமந்திரம்
D. பெரியபுராணம்

99. நெய்தல் திணையின் சிறுபொழுது யாது?

A. மாலை
B. யாமம்
C. நண்பகல்
D. எற்பாடு

100. "ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பன போல் மறித்துக் கை காட்ட" - இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது?

A. உவமையணி
B. உருவக அணி
C. தற்குறிப்பேற்ற அணி
D. தன்மையணி

**ROUGH WORK**

## ROUGH WORK